இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 27.10.2026

தேர்தல் ஆணையம் முதலில் செய்ய வேண்டியது!

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் தொடர்பாக சென்னையில் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி நடத்திய கூட்டத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட 9 கட்சிகள் வெளிநடப்பு செய்துள்ளன.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரப் பணிக்கு (SIR) எதிர்ப்புத் தெரிவித்தும், இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வலியுறுத்தியும் இவர்கள் வெளிநடப்பு செய்துள்ளார்கள்.

2027 ஜனவரி 1 ஆம் தேதியை தகுதியேற்பு நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்தை (SSR) இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட 17 மாநிலங்களில் எஸ்.எஸ்.ஆர். பணிகள் நடைபெற இருக்கின்றன. இதன்படி நவம்பர் 12 ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகும். அன்றுமுதல் டிசம்பர் 11 வரை வாக்காளர் பட்டியலில் பெயரைச் சேர்ப்பது, நீக்குவது தொடர்பாக விண்ணப்பங்கள் கொடுக்கலாம். இப்பணிகள் அனைத்தும் டிசம்பர் 28க்குள் முடியும். இறுதி வாக்காளர் பட்டியல் 2027 ஜனவரி 4 ஆம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனைக் கூட்டத்தைத் தான் தமிழ்நாடு தலைமை ஆணையர் நடத்தி இருக்கிறார்.

தி.மு.க. சார்பில் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் பரந்தாமனும், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டினும், "ஏற்கனவே நடத்தப்பட்ட SIR குளறுபடிகளை எப்போது சரி செய்யப் போகிறீர்கள்? நீக்கப்பட்ட 74 லட்சம் பேரை எப்படி சேர்க்கப் போகிறீர்கள்? இப்போது அறிவிக்கப்பட்டுள்ள SSR நடவடிக்கைகளும் குழப்பம் இல்லாமல் எப்படி நடைபெறும்?" என்ற கேள்வியை எழுப்பி விட்டு வெளிநடப்பு செய்துள்ளார்கள்.

SIR நடவடிக்கைகளுக்குப் பிறகு தமிழ்நாட்டின் வரைவு வாக்காளர் பட்டியலில் 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 வாக்காளர்கள் நீக்கப் பட்டதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இரட்டைப் பதிவு உள்ளவர்களாக 3 லட்சத்து 98 ஆயிரத்து 278 பேர் சொல்லப்பட்டார்கள். உயிரிழந்தவர்களாக 26 லட்சத்து 94 ஆயிரத்து 672 பேர் அறிவிக்கப்பட்டார்கள். 66 லட்சத்து 44 ஆயிரத்து 881 பேர் இடம் பெயர்ந்தவர்களாகச் சொல்லப்பட்டார்கள். பெரும்பாலான வாக்காளர்கள் தங்களது முகவரியில் வசிக்காததால் கண்டறிய முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

"முந்தைய முகவரியில் இல்லாத காரணத்தால் வாக்காளர்கள் நீக்கப்பட்டு உள்ளனர். வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் தேடிச்சென்ற குறிப்பிட்ட முகவரியில் வாக்காளர்கள் இல்லாததே பெருவாரியான வாக்காளர்கள் நீக்கப்பட்ட காரணம். அந்த வாக்காளர்கள் வேறு பகுதிக்கு இடம் மாறி இருக்கலாம். அல்லது வேறு காரணத்தால் கணக்கீட்டுப் படிவத்தைக் கொடுக்காமல் இருந்திருக்கலாம்" என்று தேர்தல் ஆணையம் அப்போது அறிவித்தது.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக சென்னை மாவட்டத்தில் 14 லட்சத்து 25 ஆயிரத்து 18 பேர் நீக்கப்பட்டார்கள். கோவை மாவட்டத்தில் 6 லட்சத்து 50 ஆயிரத்து 590 பேர் நீக்கப்பட்டார்கள். செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் நீக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகம். இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் பெரும் சதிகள் உள்ளன.

SIR நடவடிக்கை பல்வேறு மாநிலங்களில் தேர்தல் முடிவுகளை மாற்றி இருப்பது இப்போது அம்பலமாகி வருகிறது.

'பிசினஸ் லைன்' பத்திரிகை வெளியிட்டுள்ள கட்டுரையில், 'தமிழ்நாட்டில் செய்யப்பட்ட SIR நடவடிக்கைகள் தான் தமிழ்நாட்டின் தேர்தல் முடிவை மாற்றியது' என்று சொல்லப்பட்டது.

SIR மூலம் அதிகளவில் வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்ட தொகுதிகளில்தான் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி இருக்கிறது. குறைந்த அளவு வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் தி.மு.க.வும், அதிகளவில் வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் அதிகளவில் த.வெ.க.வும் வெற்றி பெற்றுள்ளது என்கிறது இப்பத்திரிக்கை.

80 ஆயிரம் வாக்குகள் நீக்கப்பட்ட 10 தொகுதிகளில் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளதாகவும், 50 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரை வாக்குகள் நீக்கப்பட்ட 22 தொகுதிகளில் 18 இல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளதாகவும் சொல்கிறது. 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை வாக்குகள் நீக்கப்பட்ட 37 இடங்களில் 24 இல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது. 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை வாக்குகள் நீக்கப்பட்ட 66 இடங்களில் 32 இல் த.வெ.க. வெற்றி பெற்றுள்ளது. அதாவது SIR நடவடிக்கைகள் தான் தேர்தல் முடிவுகளை மாற்றி இருக்கிறது என்று சொல்கிறது 'பிசினஸ் லைன்'.

இதன் பிறகும் SIR நடவடிக்கைகளை அப்பட்டமாக ஏற்க முடியாது. அந்தக் குழப்பங்களைத் தீர்க்காமல் அடுத்த குழப்பங்களைச் செய்ய விடவும் கூடாது.

"மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலை ரத்து செய்ய வேண்டும்" என்று உத்தவ் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே சொன்னதற்கு இதுவரை தேர்தல் ஆணையம் பதில் சொல்லவில்லை.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அனைத்தும் சர்ச்சைக்குரிய தாக மட்டுமல்ல, சந்தேகத்துக்குரியதாகவும் இருக்கின்றன. நேர்மை யான அமைப்புதான் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த தேர்தல் ஆணையம் தனது நடவடிக்கைகள் அனைத்தையும் மறுபரிசீலனை செய்தாக வேண்டும். ஞானேஷ்குமார் போன்றவர்களை வைத்துக் கொண்டு இதைச் செய்ய முடியாது.

கோமாளி த.வெ.க. அரசின் தோல்விகளை மறைக்கவும் – திசை திருப்பவுமே அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது நடவடிக்கை!

வழக்கினாலும் - கைது நடவடிக்கைகளாலும் கழக உடன்பிறப்புகளை ஒருபோதும் அடக்க முடியாது!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எச்சரிக்கை!



சென்னை, அக்.27-

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி த.வெ.க. அரசால் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு கைது செய்யப்பட்டதை கண்டித்து வலைதளப் பதிவிட்டுள்ள சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "கோமாளி த.வெ.க. அரசு, தனது தோல்விகளை மறைக் கவும் திசை திருப்பவுமே முன் னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது எனும் நடவடிக்கையை எடுத் துள்ளது" என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்க்கட்சித் தலை வர் அவர்கள், தமது வலை தளப் பதிவில், "வழக்கினாலும் - கைது நடவடிக்கைகளாலும் கழக உடன்பிறப்புகளை ஒருபோதும் அடக்க முடியாது" என்று த.வெ.க. அரசை எச்சரித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர் களின் 'ட்விட்டர்' பதிவு வருமாறு:

அரசியல் பழிவாங்கும் நோக்கோடு முன்னாள் அமைச் சர் சகோதரர்

அன்பில் மகேஸ் பொய்யா மொழி அவர்களைக் கைது செய்துள்ள இந்த சர்க்கஸ் ஆட்சியாளர்களை வன்மையா கக் கண்டிக்கிறேன்.

திரும்பிய திசையெல்லாம் தறிகெட்டுப் போயிருக்கும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் - விலைவாசி உயர்வு - த.வெ.க.வினரின் அட்டூழியங் கள் என இந்தக் கோமாளி அர சின் தோல்விகளை மறைக்க வும் - திசைதிருப்பவுமே இந்தக் கைது நடவடிக்கையை மேற் கொண்டிருக்கிறார் டம்மி CM.

சகோதரர் அன்பில் மகேஸ் இந்தச்சூழலை சட்டப்படி எதிர் கொண்டு மீண்டு வருவார். வழக்கினாலும் கைது நடவடிக் கைளாலும் கழக உடன்பிறப்பு களை ஒரு போதும் அடக்க முடி யாது.

இவ்வாறு அப்பதிவில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எச்சரித்துள்ளார்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை திசை திருப்ப அடக்குமுறைகளில் இறங்கியிருக்கிறது த.வெ.க. அரசு!

பழிவாங்கும் நோக்கில் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது!

துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, அக்.27-

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி கைது செய்யப்பட்ட தைக் கண்டித்து வலைதளப்ப திவிட்டுள்ள கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள், "சட்டம் ஒழுங்குப் பிரச்சினை களைத் திசை திருப்ப இத்தகைய அடக்குமு றைகளில் த.வெ.க. அரசு இறங்கியிருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு:-

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர் களை அரசியல் பழிவாங்கும் நோக்கில் கைது செய்திருக்கி றது தவெக அரசு.

தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்குப் பிரச்சனைகளை திசைத்திருப்ப இத்தகைய அடுக்கமுறைகளில் த.வெ.க. அரசு இறங்கியிருக்கி றது.

இவற்றை சட்ட ரீதியாக தி.மு.கழகம் எதிர்கொள்ளும்.

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி ராஜாத்தி கருணா நிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.



தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளிகளை மேம்படுத்தியுள்ளோம்!

என் மீது தொடரப்பட்ட வழக்கை சட்ட ரீதியாகச் சந்திப்பேன்!

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!

சென்னை, அக்.27-

உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளின் அடிப்படை யில் நேற்று விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மருத் துவப் பரிசோதனைக்காக சென்னை - ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகையில் தம்மைச் சந்தித்த செய்தியாளர் களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி. "தி.மு.க. ஆட்சியில் தனியார் பள்ளிக ளுக்கு இணையாக அரசுப் பள்ளிகளை மேம்படுத்தி யுள்ளோம்.

இதுபோன்ற முற்போக்கான



கழக அரசின் பல திட்டங்களால் காழ்ப்புற்று என் மீது தொடரப் பட்ட பொய் வழக்கை நான் சட்ட ரீதியாகச் சந்திப்பேன்!" என்று குறிப்பிட்டார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

என் மீது தொடரப்பட்ட வழக்கை சட்ட ரீதியாகச் சந்திக்க உள்ளேன். என் மீதான குற்றச் சாட்டுகள் அனைத்தும் கட்டுக்க தையாக மட்டுமே உள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமின் மனு தள்ளுபடி செய்யப்பட்ட ஒரே காரணத்திற் காக த.வெ.க. அரசு என்னைக் கைது செய்துள்ளது.

குற்றச்சாட்டுகள் நிரூபிக்க முடியாது!

அவர்கள் கூறும் குற்றச்சாட்டு களை ஒருபோதும் அவர்களால் நிரூபிக்க முடியாது.

குழந்தைகள் இடைநிற்றலை 'ஸீரோ' ஆக்கியிருக்கிறோம்.

அரசுப் பள்ளிகள் பெருமையின் அடையாளம்!

"அரசுப் பள்ளிகள் வறுமையில் அடையாளமல்ல! பெருமையின் அடையாளம்!" என ஆக்கியிருக்கிறோம்.

கடந்த தி.மு.க. ஆட்சியின் போது, தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளி களை மேம்படுத்தியுள்ளோம்.

ஏற்கனவே 8 மணிநேரம் என்னிடம் நடத்திய விசாரணை யின்போது முழு ஒத்துழைப்பு அளித்துள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.



மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.47 லட்சம் மதிப்பீட்டில், சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 98-வது வார்டு, அயன்புரம் கே.கே. நகர் 10-வது தெருவில் புதிய உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேனாள் அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ. ஜெயின், வே.வாசு, மாமன்ற உறுப்பினர் பிரியதர்ஷினி, வட்டக் கழக செயலாளர்கள் ச. மனோகரன், தேவராஜ் ஏ வேதா சீ.விக்னேஷ், தி.ஸ்டாலின் ஜிம். வி. சரவணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு புதிய உடற்பயிற்சிக்கூடம் கட்டுவதற்கான பணிகளைத் தொடங்கி வைத்தனர்.